## DEPOSITION OF WITNESS

## (Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM

| | |
|---|---|
| CC No. | : 58/2021 |
| Name | : Subramani |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெட்டியாபாளையத்தில் தோட்டத்துச் சாளையில் வசித்து வருகிறேன். எனது மகன் பாலதண்டபாணி விவசாயம் மற்றும் பால் வியாபாரம் செய்து வந்தார். 8ம் தேதி விபத்து ஏற்பட்டது. மாதம், வருடம் ஞாபகம் இல்லை. அப்போது எனது மகனுக்கு 25 வயது. எனது மகன் Splendor இருசக்கர வாகனத்தில் என்னை தண்ணீர் பந்தலில் இருந்து மேற்கே ரோட்டிற்கு காலை 7.45 மணிக்கு சென்றோம். என்னை இறக்கிவிட்டுவிட்டு என் மகன் வடக்கே சென்றான். அப்போது மேற்கிலிருந்து வந்த லாரி எண். ஞாபகம் இல்லை என் மகன் மீது மோதியது. என் மகனுக்கு மண்டையில் காயம் ஏற்பட்டது. என் மகனை 108 ஆம்புலன்ஸ் மூலம் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவர் என் மகனை பார்த்துவிட்டு இறந்துவிட்டதாக சொன்னார். இது சம்மந்தமாக போலீஸில் புகார் அளித்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.ஆ.1 புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் எழுதினார்கள். அ.சா.ஆ.1 புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. போலீசார் புகாரை படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் நானும், எனது உறவினர் சக்திவேலும் பேசிக்கொண்டிருந்த போது சத்தம் கேட்டு தான் திரும்பிப் பார்த்தேன் என்றால் சரிதான். எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் காலை போக்குவரத்து அதிகமாக இருந்தது என்றால் சரிதான். எனது மகன் ரோட்டின் தென்புறத்தில் இருந்து வடபுறம் எதிரியின் வாகனத்தை பார்க்காமல் குறுக்கே சென்றதால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என் மகன் தான் முழுக் காரணம் என்றால் அவர் தான் அஜாக்கிரதையாக வந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெற வேண்டி பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 58/2021 |
| Name | : Sakthivel |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெட்டியாபாளையத்தில் வசித்து வருகிறேன். பால் வியாபாரம் செய்து வருகிறேன். 8.4.2021ம் தேதி காலை சுமார் 7.45 மணிக்கு மடத்துக்குளம் சன் மோட்டார்ஸ் அருகே பாலதண்டபாணி பெட்ரோல் அடிக்க பணம் கேட்டார். நான் பணம் கொடுத்த உடன் அவரது அப்பா சுப்பிரமணி உடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது பாலதண்டபாணி வாகனத்தை திருப்பினார். மேற்கில் இருந்து வந்த லாரி எண் ஞாபகம் இல்லை அவர் மீது மோதியது. நாங்கள் சென்று பார்த்தோம். பாலதண்டபாணிக்கு தலை மற்றும் கையில் ரத்தக் காயம் ஏற்பட்டது. மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு செல்லச் சொன்னார்கள். அங்கு சென்ற போது பாலதண்டபாணி இறந்துவிட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சம்பவம் நடந்த அன்றே போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தார்கள். யார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் போலீசார் பதிவு செய்தார்கள். அவர் என்ன பதவி வகித்தார் என்று தெரியாது. விபத்து நடந்த சாலை சற்று வளைவாக இருக்கும் என்றால் சரிதான். பாலதண்டபாணி தெற்கில் இருந்து வடக்காக மேற்கில் வந்த வாகனத்தை பார்க்காமல் வளைந்தார். பாலதண்டபாணி மேற்கில் வந்த வாகனத்தை பார்க்காமல் கவனக்குறைவாக திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எதிரி லாரியை நிறுத்தியிருக்கலாம் அவர் நிறுத்தாமல் வந்ததால் விபத்து ஏற்பட்டது. சம்பவம் நடந்த சமயத்தில் போக்குவரத்து அதிகமாக இருந்தது என்றால் சரிதான். நானும், அ.சா.1 ம் சாலையின் தென்புறம் நின்று பேசிக்கொண்டிந்தோம். பாலதண்டபாணி எனக்கு உறவினர் என்றால் சரிதான். ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் ஆவாம். நானும், அ.சா.1 ம் சத்தம் கேட்டுத்தான் போனோம் என்றால் சரிதான். நான் இறந்து போன பாலதண்டபாணிக்கு உறவினர் என்பதால் நஷ்ட ஈடு பெற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 58/2021 |
| Name | : Muthulakshmi |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.05.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெட்டியாபாளையத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். தேதி ஞாபகம் இல்லை. எனது மகன் விபத்தில் இறந்துவிட்டார். விபத்து நடந்த சமயத்தில் நான் ஊரில் இருந்தேன். தகவல் தெரிந்து உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என் மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த வழக்கு விபத்து நடந்த சமயத்தில் நான் ரெட்டிபாளையத்தில் இருந்தேன். விபத்து சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்